www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Acc

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி

கணக்குப்பதிவியல்

மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.

**20×1=20**

1) Tally-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள்?
(i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு
அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும்
இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

2) அலுவலக பயன்பாட்டிற்காக ₹ 25,000 வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் இந்த நடவடிக்கை பதியப்படும்?
அ) எதிர்பதிவு சான்றாவணம் ஆ) பெறுதல்கள் சான்றாவணம்
இ) செலுத்தல்கள் சான்றாவணம் ஈ) விற்பனை சான்றாவணம்

3) பட்டியல் I-ஐ பட்டியல் II-வுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| ii) நிகர இலாப விகிதம் | 2. செயல்திறன் |
| iii) புற அக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

4) விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 3,00,000; அவ்வாண்டில் தொடக்கச் சரக்கிருப்பு ₹ 60,000; இறுதிச் சரக்கிருப்பு ₹ 40,000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
அ) 2 மடங்கு ஆ) 3 மடங்கு இ) 6 மடங்கு ஈ) 8 மடங்கு

5) நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்ட கால தகவல்கள்

6) ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட காலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100

7) ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

8) சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹ 10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்பு தொகை ₹ 2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலின காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய தொகை
அ) ₹ 700 ஆ) ₹ 800 இ) ₹ 900 ஈ) ₹ 1,000

9) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த A என்பவர் 2019, மார்ச் 31 அன்று இறந்துவிட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹ 25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு
அ) Aன் முதல் க/கு ஆ) Aன் கடன் க/கு
இ) Aன் நிறைவேற்றாளர் க/கு ஈ) Aன் நிறைவேற்றாளர் கடன் க/கு

10) X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்துவிட்டார். 2018-ல் இலாபம் ₹ 36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டிற்குரிய இலாபத்தில் Xன் பங்கினைக் கண்டறியவும்.
அ) ₹ 1,000 ஆ) ₹ 3,000 இ) ₹ 12,000 ஈ) ₹ 36,000

11) கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?
அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்.
ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாப நட்டம் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறுகட்டமைக்கப்படும்.
ஈ) ஏற்கெனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது.

12) கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வைவிட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம்
இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

13) கீழ்வருவனவற்றில் எது சரியானது?
அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

14) ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000; சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு
அ) ₹ 40,000 ஆ) ₹ 70,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹ 30,000

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன்படி வழங்கப்படும் வட்டிவீதம்
அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%

16) தவறான சொற்றொடரைக் கண்டுபிடி.
அ) கூட்டாளிகள் இலாபம் (அ) நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.
ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி 7% அனுமதிக்க வேண்டும்.
இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் (அ) ஊதியம் அனுமதிக்கப்படமாட்டாது.
ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

17) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
அ) இலாபம் (அ) நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி
இ) உபரி (அ) பற்றாக்குறை ஈ) நிதிநிலை

18) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு

19) கடன் கொள்முதல் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
அ) மொத்த கடனாளிகள் க/கு ஆ) மொத்த கடனீந்தோர் க/கு
இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

20) கடனாளிகள் தொடக்க இருப்பு ₹ 30,000, பெற்ற ரொக்கம் ₹ 1,00,000, கடன் விற்பனை ₹ 90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹ 20,000

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) நிலையறிக்கை என்றால் என்ன?
22) இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைக் தரவும்.
23) ஜெயராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ₹ 10,000 எடுத்துக்கொண்டார். எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.
24) பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டுக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.
(அ) சொத்தின் மீதான தேய்மானம் (ஆ) பதிவுறா பொறுப்புகள்
(இ) கொடுபட வேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு (ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்
25) தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாப, நட்டம் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ₹ 50,000 காப்பு நிதியைக் காட்டியது. காப்பு நிதியை மாற்றுவதற்குத் தேவையான பதிவினைத் தரவும்.
26) பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
27) போக்கு பகுப்பாய்வு எப்போது இதர பகுப்பாய்வு கருவிகளை விட ஏற்புடையதாகும்?
28) அமிலச் சோதனை விகிதம் என்றால் என்ன?
29) ஏதேனும் நான்கு கணக்கியல் அறிக்கைகளைக் கூறுக.
30) ''வாங்கப்பட்ட நற்பெயர்'' - ஆய்க.

## பகுதி - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.
32) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
33) கீழ்கண்ட தகவல்களிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.
மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹ 2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹ 4,50,000; சரக்கிருப்பு ₹ 70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹ 20,000.
34) பாரடைஸ் வரையறு நிறுமம் ₹ 4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா வரையறு அறைகலன் நிறுவனத்திடம் இருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹ 10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக 10% முனைமத்தில் வெளியிட்டு செலுத்தி நிறைவு செய்தனர். குறிப்பேட்டுப் பதிவு தருக.
35) பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 2,00,000 (ii) சாதாரண இலாப விகிதம் 15%
(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம் ₹ 42,000
36) சிறுகுறிப்பு வரைக: (i) உயில்கொடை (ii) மதிப்பூதியம்
37) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதிமுதல் | 80,000 |
| அவ்வாண்டில் இட்ட கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளன்று முடியும் ஆண்டில் நட்டம் | 25,000 |

38) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த நான்கு ஆண்டு சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயர் மதிப்பை கணக்கிடவும்.
அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கான இலாபங்கள் முறையே ₹ 10,000, ₹ 12,500, ₹ 12,000 மற்றும் ₹ 11,500.
ஆ) வியாபாரம் கூட்டாளி ஒருவரால் நடத்தப்பட்டது. அக்கூட்டாளியின் உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹ 1,500. இந்தத் தொகை மேற்கண்ட இலாபங்களைக் கணக்கிடும்போது சேர்க்கப்படவில்லை.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



39) ஒரு நிறும பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளைப் பட்டியலிடுக.

40) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932ன்படி கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **7×5=35**

41) அ) ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து மொத்த இலாப விகிதம் நிகர இலாப விகிதம் மற்றும் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III. மொத்த வருவாய் (I+II) | 4,04,000 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் (நிர்வாகம் & விற்பனை) | 60,000 |
| மொத்த செலவுகள் | 3,24,000 |
| V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III−IV) | 80,000 |

**(அல்லது)**

ஆ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

42) அ) சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய பொதுஅளவு இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | சர்மிளா நிறுமம் ₹ | சங்கீதா நிறுமம் ₹ |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,00,000 | 11,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 4,00,000 | 7,00,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |
| II. சொத்துகள் | | |
| நிலைச் சொத்துகள் | 6,50,000 | 18,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 3,50,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |

**(அல்லது)**

ஆ) ராஜீ முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கி கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹ 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாபநட்ட அறிக்கை தயாரிக்கவும்.

43) அ) பின்வரும் தகவல்களிலிருந்து அனு நிறுமத்தின் போக்கு சதவிகிதங்களைக் கணக்கிடவும்.

₹ ஆயிரத்தில்

| விவரம் | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| II. சொத்துகள் | | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்புச் சொத்துகள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

**(அல்லது)**

ஆ) நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளைக் கூறி விளக்கு.

44) அ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹ 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ₹ 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



₹ 2 விண்ணப்பத்தின் மீதும்
₹ 5 முனைமம் உட்பட ஒதுக்கீட்டின் மீதும்
₹ 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்
மிகை ஒப்பமாக 30000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்து தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) வினோத் கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ₹ 18,000 அதிகரிக்க வேண்டும்.
ii) இயந்திரத்தின் மதிப்பை ₹ 15,000 குறைக்க வேண்டும்.
iii) கொடுபட வேண்டிய செலவுகளுக்கு ₹ 8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

45) அ) இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஜேம்ஸ் மற்றும் ஜஸ்டினாவின் 1.1.2017ம் நாளன்றைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 70,000 |
| ஜேம்ஸ் | 40,000 | | சரக்கிருப்பு | 30,000 |
| ஜஸ்டினா | 50,000 | 90,000 | கடனாளிகள் | 20,000 |
| கடனீந்தோர் | | 35,000 | வங்கி ரொக்கம் | 15,000 |
| காப்பு நிதி | | 15,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 5,000 |
| | | 1,40,000 | | 1,40,000 |

மேற்கூறிய நாளில் பாலன் என்பவரை எதிர்கால இலாபத்தில் 1/5 பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.
i) பாலன் ₹ 25,000 முதல் கொண்டு வந்தார்.
ii) நற்பெயரில் அவருடைய பங்காக ₹ 10,000 ரொக்கமாக கொண்டு வந்தார்.
iii) சொத்துகள் கீழ்கண்டவாறு மதிப்பிடப்பட்டன.
கட்டடம் ₹ 80,000; கடனாளிகள் ₹ 18,000; சரக்கிருப்பு ₹ 33,000.
தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக்குறிப்பினைத் தயார் செய்யவும்.

**(அல்லது)**

ஆ) Tally ERP -9-ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை விளக்குக.

46) அ) பின்வரும் தகவல்களிலிருந்து பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி ₹ | பத்மா ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018ல் இலாபப் பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | - |
| கழிவு | - | 21,000 |

**(அல்லது)**

ஆ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினை தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| | | அறைகலன் விற்றது | 5,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | சந்தா பெற்றது | 10,000 |
| தணிக்கை கட்டணம் செலுத்தியது | 2,000 | | |

47) அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1ல் கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1ல் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31ல் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31ல் பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com